பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 06 2026** **6 45**

**சனிக்கிழமை** **காலை**

<u>**தலைப்புச் செய்திகள்**</u>

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று செஷெல்ஸ் நாட்டுக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

**2.** கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மையத்தில் உலகின் முதல் ஹைட்ரஜன் உற்பத்தி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.

**3.** தமிழகத்தின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டும் என்றால் கிராமப்புறங்களும் வளர்ச்சி பெற வேண்டும் என்று மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. குமார் தெரிவித்துள்ளார்.

**4.** தமிழக அரசின் தில்லி பிரதிநிதியாக கர்நாடகாவை சேர்ந்த திரு. வெங்கட நாராயணா நியமனத்தை மாநில அரசு திரும்பப் பெற வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**5.** ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா 7-1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று செஷெல்ஸ் நாட்டுக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

**2015**ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்நாட்டிற்கு பிரதமர் செல்வது இது இரண்டாவது முறையாகும்.

அந்நாட்டின் சுதந்திர தின பொன்விழா கொண்டாட்டங்களில் அவர் பங்கேற்கிறார்.

இந்த கொண்டாட்டங்களில் இந்திய ராணுவத்தின் ஒரு குழுவினரும், இந்திய கடற்படையின் **2** கப்பல்களும் பங்கேற்க உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தின்போது பிரதமர் திரு. நரேந்திர மோடி செஷெல்ஸ் அதிபர் டாக்டர் **Patric Herminie-**யை சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த விஷயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாட உள்ளார்.

தனது பயணத்தின் ஒரு பகுதியாக செஷெல்ஸ் நாட்டு நாடாளுமன்றத்திலும் திரு. மோடி உரையாற்ற உள்ளார்.

அங்குள்ள இந்திய வம்சாவளியினரையும் சந்தித்து உரையாட அவர் திட்டமிட்டுள்ளார்.

<<<<>>>>

கல்பாக்கத்தில் உள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் அதிவேக ஈனுலை சோதனை உலையில் இருந்து பெறப்பட்ட வெப்பத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் ஹைட்ரஜன் உற்பத்தி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.

நாட்டின் தூய்மையான எரிசக்தி மற்றும் மேம்பட்ட அணுசக்தி திட்டத்தில் இது ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

இந்த நிலையத்தை நேற்று அணுசக்தி துறையின் செயலாளர் மற்றும் அணுசக்தி ஆணையத்தின் தலைவருமான திரு. அஜித் குமார் மொகந்தி தொடங்கி வைத்தார்.

மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வெப்ப வேதியியல் செயல்முறையைப் பயன்படுத்தி அணுசக்தி மூலம் ஹைட்ரஜன் உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்கான ஒரு தொழில்நுட்ப செயல் விளக்க மையமாகவும் இந்த நிலையம் செயல்படும் என்று அவர் கூறினார்.

அணுசக்தி மூலம் கிடைக்கும் வெப்பத்தை ஹைட்ரஜன் உற்பத்தியுடன் வெற்றிகரமாக ஒருங்கிணைப்பது ஒரு முன்னோடி தொழில்நுட்பத்தின் திருப்பமுனை என்றும் அவர் தெரிவித்தார்.

மேம்பட்ட அணு உலைகளைப் பயன்படுத்தி பெரிய அளவிலான கார்பன் இல்லாத ஹைட்ரஜன் உற்பத்திக்கான நம்பிக்கையை இந்த நிலையம் ஏற்படுத்தியுள்ளதாக கல்பாக்க அணு ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் திரு. ஸ்ரீகுமார் பிள்ளை கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் பொருளாதாரம் ஒன்று புள்ளி ஐந்து ட்ரில்லியன் என்ற இலக்கை அடைய வேண்டும் என்றால், கிராமப்புறங்களும் வளர்ச்சி பெற வேண்டும் என்று மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. குமார் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் கட்டப்பட்டு வரும் டிஜிட்டல் நூலகத்தை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இளைஞர்களின் மேம்பாட்டுக்காக மாவட்டம் தோறும் மைதானங்கள் கட்டுமானப் பணி நடைபெற்று வருவதாக கூறினார்.

கணினி அடிப்படையிலான டிஜிட்டல் நூலகம், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொழிற்சாலைகளில் சிறார்களை பணியில் ஈடுபடுத்த ஏற்கனவே தடை உள்ளதால், இதுகுறித்து அதிகாரிகள் தீவிரமாக ஆய்வு செய்து வருவதாகவும் அமைச்சர் திரு. குமார் கூறினார்.

<<<<>>>>

எதிர்க்கட்சிகளின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் அரசாக த.வெ.க அரசு இருப்பதாக மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சில மாநகராட்சிகளில் தூய்மைப் பணியை தனியார்வசம் ஒப்படைக்க மாநில அரசு முடிவு செய்தபோது அதைத் திரும்ப பெற வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதாக கூறினார்.

தாட்கோ மூலம் வங்கிகளில் கடன் பெறும் முறையை எளிதாக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக அரசின் தில்லி பிரதிநிதியாக கர்நாடகாவை சேர்ந்த திரு. வெங்கட நாராயணா நியமணத்தை மாநில அரசு திரும்பப் பெற வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாது அணை கட்டுமானம் தொடர்பாக தமிழ்நாடு - கர்நாடகா இடையே பிரச்சினை உள்ள நிலையில், இந்த நியமனம் நியாமமற்றது என்று தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் அதிகரித்து வரும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை தடுப்பதற்கு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாநில அரசை திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் தமிழக அரசியலில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக விசிக தலைவர் திரு. தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், த.வெ.க. கூட்டணி அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளதற்காக விசிக மற்றும் காங்கிரஸ் கட்சிகளை விமர்சிப்பது சரியல்ல என்று தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருநெல்வேலி ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் மறுசீரமைப்பு பணிகள் காரணமாக சில ரயில்களின் சேவையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

திருச்சியில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் அதிவிரைவு ரயில் இன்று காலை மணி 7.15க்கு புறப்பட வேண்டிய நிலையில், காலை 9 மணிக்கு புறப்பட்டுச் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் - கட்ச்குடா விரைவு ரயில் நாகர்கோவலில் இருந்து இன்று காலை மணி 9.25க்கு பதிலாக நண்பகல் மணி 12.05க்கு புறப்பட்டுச் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் - திண்டுக்கல் இடையிலான விரைவு ரயில் தாமரைப்பாடி - திண்டுக்கல் இடையே பகுதியளவு இன்று ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது, திரும்பப் பெறப்படுவதாகவும், இந்த ரயில் வழக்கமான கால அட்டவணைப்படி இயங்கும் என்றும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வளிமண்டல சுழற்சி காரணமாக தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் மாலை மற்றும் இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

## *இருவரிச் செய்திகள்*

இஸ்ரேல் - லெபனான் இடையே நீண்டகால அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

-------------

**கொலம்பிய அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள Abelardo D La Espriell-வுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.**

-------------

**மும்பையில் 3 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருளை அம்மாநில காவல்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.**

-------------

**அருணாச்சலப்பிரதேச மாநிலத்தில் பெய்து வரும் கனமழையால் சில கிராமங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.**

-------------

**நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் ரயிலின் சோதனை ஓட்டம் நேற்று தில்லி - Jind இடையே நடைபெற்றது.**

-------------

திருவள்ளூர் மாவட்டத்தில் அமோனியா கசிவு ஏற்பட்ட தனியார் தொழிற்சாலையில் மாவட்ட ஆட்சியர் திரு. கவிதா நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

-------------

தருமபுரியில் சாலை விபத்தில் உயிரிழந்த பார்வையற்ற மாற்றுத்திறனாளியான கண்ணு-வின் உடல் உறுப்புகள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தானமாக வழங்கப்பட்டது.

-------------

அழியும் நிலையில் உள்ள அரியவகை உயிரினங்களை அறிவியல்பூர்வமாக அடையாளம் காணும் நிலையான நடைமுறையை தேசிய பல்லுயிர் ஆணையம் வெளியிட்டுள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா 7-1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

லண்டனில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தின் முதல் பாதியில் பாகிஸ்தான் வலுவான நிலையில் ஒரு கோல் அடித்தபோதும் இந்திய

அணியினர் சுதாரித்துக்கொண்டு திறமையாக விளையாடியதால் அடுத்தடுத்து கோல்களை அடித்தனர்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சுக்பித் சிங் மற்றும் ஹர்மன் ப்ரீத் சிங் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து அணியை முன்னிலைப்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து ஹர்திக் சிங், ஜுக்ராஜ் சிங், அபிஷேக் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து இந்தியாவின் கோல் எண்ணிக்கையை உயர்த்தினர்.

ஆட்டம் முடியும் முன்பு தில்ப்ரீத் சிங் ஒரு கோல் அடித்தார்.

---------------

இந்தியா — அயர்லாந்து இடையிலான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி **Belfast-**ல் நேற்று நடைபெற்றது.

இதில் அயர்லாந்து **34** ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் களமிறங்கிய அயர்லாந்து நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **9** விக்கெட் இழப்புக்கு **182** ரன் எடுத்தது.

**183** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா **18** புள்ளி **5** ஓவரில் **148** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<The End>>>>**